Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 90

செவ்வாய்க்கிழமை
24 பெப்ரவரி 2026

மாசி 12 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50



## குறைந்தது பணவீக்கம்

கொழும்பு, பெப். 24
நாட்டின் பணவீக்கம் கணிசமாகக் குறைந்துள்ளது என்று, தொகை மதிப்பு மற்றும்

>>>11

# இனப்படுகொலையால் நாமலின் உரை ரத்து!

### பிரிட்டன் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு தெரிவிப்பு

**லண்டன், பெப்ரவரி 24**
தமிழர்கள் மீது ராஜபக்சாக்கள் முன்னெடுத்த இனப்படு கொலை காரணமாகவே, ஒக்ஸ்போர்ட் யூனியனில் நாமல் நிகழ்த்தவிருந்த உரை ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று பிரிட்டன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்துள்ளது.

>>>11

## சர்வதேசக் கருத்தரங்கில் லலீசனின் உரை இன்று!



யாழ்ப்பாணம், பெப். 24
உலகத் தமிழ்ச் சங்கம் நடத்தும் சர்வதேச கருத்தரங்கொன்றில், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் இன்று உரையாற்றவுள்ளார்.
உலகத் தமிழ்ச் சங்கமும், மதுரை அன்னை திரேசா மகளிர் பல்கலைக்கழகமும்

>>>11

## பிக்குகளைக் கட்டுப்படுத்த எவராலும் முடியாது

### பொதுபலசேனா இறுமாப்பு



கொழும்பு, பெப். 24
பிக்குகளைக் கட்டுப்படுத்த எவராலும் முடியாது. அத்துடன், நாட்டுக்காகவும் நாட்டின் தேசியப் பாதுகாப்புக்காகவும் முன்னிற்பதற்கு தயங்கப்போவதில்லை - இவ்வாறு சிங்கள கடும்போக்கு அமைப்பான பொது

>>>11

### இளவாலையில்

## வெடிக்காத நிலையில் மோட்டார்குண்டு மீட்பு!

யாழ்ப்பாணம், பெப். 24
இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முள்ளானை பகுதியில் மோட்டார் குண்டொன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது. உரப்பையில் சுற்றி பற்றைக்குள் வீசப்பட்டிருந்த நிலையிலேயே அந்தக் குண்டு மீட்கப்பட்டுள்ளது.

>>>11

### கொக்குத்தொடுவாயில்

## மக்களின் காணிகளை ஊடறுத்து யானைவேலி

### ரவிகரன் எம்.பி. குற்றச்சாட்டு



முல்லைத்தீவு, பெப். 24
முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் பகுதியில், தமிழர்களின் நெற்செய்கைக் காணிகளை ஊடறுத்து மகாவலி அதிகாரசபையால் யானைவேலிகள் அமைக்கப்பட்டுள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் குற்றஞ் சாட்டியுள்ளார்.
இது தொடர்பில் அவர்

>>>11

### அத்துகோரள கொலை

## பிரதிவாதிகள் விரைவில் மேன்முறையீடு செய்வர்!

கொழும்பு, பெப். 24
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள மற்றும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர் படுகொலை செய்யப்பட்ட வழக்கில், மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் மேன்முறையீடு செய்வதற்குத் தீர்மானித்

>>>11

## படிக்கட்டால் வீழ்ந்து குடும்பத்தலைவர் பலி

யாழ்ப்பாணம், பெப். 24
படிக்கட்டில் தவறிவீழ்ந்த குடும்பத்தலைவர், மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார். சுன்னாகம் - ஊரெழு பகுதியைச் சேர்ந்த வைத்திலிங்கம் ஜெயச்சந்திரன் (வயது-57) என்ற குடும்பத் தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
படிக்கட்டுகளால் இறங்

>>>11

### சட்டவிரோதமாக

## கடலட்டை பிடித்த பத்துப் பேர் கைது



கிளிநொச்சி, பெப். 24
கிளிநொச்சி - இரணைதீவு கடற்பரப்பில் சட்டவிரோதமாக கடலட்டை பிடித்த 10 பேர், கடற்படையால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.
இரணைதீவுக் கடற்பரப்பில் நேற்றுக் காலை கடற்படையி

>>>11



"மதம் பிடிச்ச யானையும்
ஆருக்கும் அடங்காது.
அதை மாதிரி
மதம் பிடிச்ச இவையும்
ஆருக்கும் அடங்காயினம்
தானே"

முச்சந்தி முராளி



## வயோதிபப் பெண்மீது கத்திக்குத்துத் தாக்குதல்

### வவுனியாவில் பரபரப்பு
### மற்றொரு பெண் கைது

வவுனியா, பெப். 23
வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் உள்ள வியாபார நிலையமொன்றில், வயோதிபப் பெண்ணொருவர் மீது கத்திக் குத்துத் தாக்குதல்

>>>11

## கஞ்சாப் பொதியுடன் நபரொருவர் கைது!

விரிவு பக்கம்:-11

## அச்சுவேலி வீடொன்றில் பணம், நகைகள் திருட்டு

### ரூ.30 லட்சத்துக்கு மேற்பட்டவை

யாழ்ப்பாணம், பெப். 24
அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில், 7 பவுண் நகைகள், 7 லட்சம் ரூபா பணம் என 30 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட உடைமைகள் திருடப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-
அச்சுவேலி வடக்குப் பகுதியில் உள்ள வீடொன்றின் உரிமையாளர், கடந்த

>>>11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 23.02.2026
சீட்டிழுப்பு இலக்கம் 4356
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள்
23 32 42 45
விசேட எழுத்து P

**ஹந்தஹஹண ராசி சுப பலன்**
திகதி 23.02.2026
சீட்டிழுப்பு இலக்கம் 1423
வெற்றி இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள்
04 33 47 55

**NLB ஜய**
திகதி 23.02.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0382
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள்
2 5 4 5

**மெகா பவர்**
திகதி 23.02.2026
சீட்டிழுப்பு இலக்கம் 2462
ஆங்கில எழுத்து O
சுப்பர் இலக்கம் 13
வெற்றி இலக்கங்கள்
09 14 30 49

**மஹஜன சம்பத**
திகதி 23.02.2026
சீட்டிழுப்பு இலக்கம் 6114
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள்
8 7 5 2 2 7

**தன நிதானய**
திகதி 23.02.2026
சீட்டிழுப்பு இலக்கம் 2144
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள்
23 41 49 77
விசேட எழுத்து R

**சுப தவசக்**
திகதி 23.02.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0230
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள்
22 29 67

# தரமற்ற நிலக்கரிச் சர்ச்சைக்கு சட்டமா அதிபரின் ஆலோசனை

## அரசாங்கம் திட்டம்

கொழும்பு, பெப்.24

**தென்னாபிரிக்காவிலிருந்து இந்திய நிறுவனம் ஊடாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி தரம் குறைந்தது என்பது பரிசோதனைகளில் கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கம் இதுதொடர்பில் சட்டமா அதிபரின் சட்ட ஆலோசனையைப் பெறத் திட்டமிட்டுள்ளது.**

இந்தத் தரம் குறைந்த நிலக்கரியால் எதிர்வரும் மாதங்களில் மின்சார விநியோகம் பெரிதும் பாதிப்புக்குள்ளாகும் சூழ்நிலை உருவாகும் என்று கூறப்படுகின்றது. இதனால் நிலக்கரி இறக்குமதி ஒப்பந்தக்காரர் மாற்றத்துக்கு உள்ளாகும் நிலை கூட உருவாகலாமென நம்பப்படுகின்றது.

இந்தியாவின் ட்ரைடன் சேம்பர் லிமிட்டெட் நிறுவனம் தென்னாபிரிக்காவிலிருந்துமூன்றுதடவைகள் தொடர்ச்சியாக இறக்குமதி செய்த நிலக்கரி தரம் குறைந்தது என்று லக் விஜய நிலக்கரி நிலையத்தின் உள்ளக ஆவணங்கள் முன்னர் தெரிவித்திருந்தன. இங்கு இறக்குமதி செய்யப்பட்ட அதாவது தென்னாபிரிக்காவிலிருந்து இந்திய நிறுவனம் தருவித்த நிலக்கரியின் மொத்தக் கலோரிப் பெறுமதி குறைவாகக் காணப்படுவதால் இலங்கையின் மூன்று மின்பிறப்பாக்கிகளில் மின்சார உற்பத்திக்கு ஏற்படுத்தப்படவேண்டிய மொத்த வெப்பநிலை ஒப்பீட்டளவில் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒப்பந்த அடிப்படையில் இவ்வாறு 23 கப்பல்களிலிருந்து தரம்குறைந்த நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. (எ-இ)

# பொலிஸார் போன்று நடித்து பணம் பறிக்கும் கும்பல்கள்!

## பொதுமக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, பெப்.24

பொலிஸ் அதிகாரிகள் போன்று பாசாங்கு செய்து பொதுமக்களிடம் இருந்து பணம் பறிக்கும் கும்பல்கள் தொடர்பில் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான மோசடிகள் தொடர்பாகப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும், சில சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையின் நிலையான தொலைபேசி எண்களை ஒத்த வெளிநாட்டு எண்களிலிருந்து வங்கி வாடிக்கையாளர்கள் மற்றும் தொழில்வல்லுநர்களைத் தொடர்பு கொள்ளும் இந்தக் குழு, ஆரம்பத்தில் வங்கி அதிகாரிகள் போலப் பேசி, உங்கள் கணக்குத் தொடர்பாக முறைப்பாடுகள் வந்துள்ளன என்று பயமுறுத்துகின்றனர். பின்னர் சட்டநடவடிக்கை எனக் கூறி, பொலிஸ் அதிகாரிகள் போன்ற ஆடை அணிந்த நபர்களுடன் வட்ஸ்அப் ஊடாக வீடியோ அழைப்புகளை ஏற்படுத்துகின்றனர். அந்த அழைப்புகளில் தாங்கள் பொலிஸ் நிலையத்தில் இருப்பது போன்ற ஒரு சூழலை உருவாக்கி, பொதுமக்களை விசாரணை செய்வது போலவும் வாக்குமூலங்களைப் பதிவுசெய்வது போலவும் நடித்து அவர்களை நம்பவைக்கின்றனர். வங்கிக் கணக்கைப் பாதுகாப்பதாகவோ அல்லது சரிபார்ப்பதாகவோ கூறி, அவர்கள் வழங்கும் பல வங்கிக் கணக்குகளுக்குப் பணத்தை மாற்றச் சொல்கின்றனர். இவ்வாறு பெறப்படும் பணம், பின்னர் இடைத்தரகர்கள் மூலம் கிரிப்டோகரன்சியாக மாற்றப்படுவது விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இலங்கை பொலிஸார் ஒருபோதும் வட்ஸ்அப் வீடியோ அழைப்புகள் மூலம் விசாரணைகளை நடத்தி பணப் பரிமாற்றங்களைக் கோருவதில்லை. இவ்வாறான சந்தேகத்துக்கிடமான அழைப்புகள் வந்தால் உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு அல்லது பொலிஸ் தலைமையகத்துக்குத் தெரியப்படுத்தவேண்டும் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)

# இறக்குமதியான வாகனங்களை விடுவிக்க அரசிடம் கோரிக்கை

கொழும்பு, பெப்.24

கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டைத் துறைமுகங்களில் தேங்கியுள்ள இறக்குமதி செய்யப்பட்ட 2 ஆயிரம் வாகனங்களை விடுவிக்க வேண்டும் என்று வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. வாகன இறக்குமதி தொடர்பான பரிந்துரைகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படுவதற்கு முன்னரே இந்த வாகனங்கள் முற்பதிவு செய்யப்பட்டமையால், அவற்றை விடுவிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்று வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் செயலாளர் பிரசாத் குலதுங்க தெரிவித்துள்ளார். இந்த வாகனத் தொகுதிக்கான அனைத்துக் கொடுப்பனவுகளும் ஏற்கனவே செலுத்தப்பட்டுவிட்டன. வாகனங்களை விடுவிப்பதற்கான நிபந்தனைகளில் ஏதேனும் சலுகைகளை வழங்கியாவது அவற்றை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோருகின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



**சுபிரி தன சம்பத**
திகதி 23.02.2026
தினம் திங்கட்கிழமை
வெற்றி வாரம் 0822
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கம் 7 7 6 1 9 8

**Super Ball** DLB
திகதி 23.02.2026
தினம் திங்கட்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 3088
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கம் 11 22 27 58

**சனிதா** DLB
திகதி 23.02.2026
தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கம் 30 55 61 67
வெற்றி வாரம் 5249

**SASIRI** DLB
திகதி 23.02.2026
தினம் திங்கட்கிழமை
வெற்றி வாரம் 0918
வெற்றி இலக்கம் 32 35 50

**லக்ன ராசி**
திகதி 23.02.2026
தினம் திங்கட்கிழமை
விருச்சிகம்
வெற்றி இலக்கம் 16 19 32 46
சீட்டிழுப்பு வாரம் 4800

**KAPRUKA** DLB
திகதி 23.02.2026
தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து M
சுப்பர் இலக்கம் 02
வெற்றி இலக்கம் 12 21 44 62
வெற்றி வாரம் 2264

**அத கோடிபதி** DLB
திகதி 23.02.2026
தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கம் 19 37 57 72
வெற்றி வாரம் 2914

# கொழும்பு–மட்டக்களப்பு ரயில்சேவை மீள ஆரம்பம்

கொழும்பு, பெப்.24

கொழும்புக் கோட்டையிலிருந்து மட்டக்களப்பு வரையான 'மீனகயா' இரவுநேர நகரங்களுக்கு இடையிலான கடுகதி ரயில்சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று இலங்கை ரயில்வேத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்புக் கோட்டையிலிருந்து இரவு 7 மணிக்கும், மட்டக்களப்பிலிருந்து இரவு 8 மணிக்கும் இந்த ரயில்சேவை முன்னெடுக்கப்படும்.

குளிரூட்டப்பட்ட முதல் வகுப்புப் பெட்டி மற்றும் இரண்டாம் வகுப்புப் படுக்கை ஆசனங்களைக் கொண்ட இரண்டு பெட்டிகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றும் ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-இ)

# கடற்கரையில் ஒதுங்கிய பெண்ணின் உடல்

கொழும்பு, பெப்.24

மொரட்டுவை, கொரலவெல்ல ஜூபிலி வீதி கடற்கரையில் பெண் ஒருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது.

மொரட்டுவை, கொரலவெல்ல பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய பெண் ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். பெண்ணின் உயிரிழப்புக்கான காரணம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னரே உறுதிப்படுத்தப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ள பொலிஸார், முதற்கட்டமாக, உயிரிழந்த பெண்ணுடன் தனிப்பட்ட தகராறில் ஈடுபட்டனர் என்று கூறப்படும் மூன்று பெண்களைக் கைதுசெய்துள்ளனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இனவாதத்தைத் தூண்டுவோரால் ஆட்சியைத் தீர்மானிக்கமுடியாது

## முன்னிலை சோசலிசக் கட்சி தெரிவிப்பு

**கொழும்பு,பெப்.24**
**அரசியலில் ஈடுபடும் உரிமை அனைவருக்கும் சமமானது. எனினும் மத அடையாளங்களைப் பயன்படுத்தி, இனவாதத்தைத் தூண்டி, அதன் ஊடாக ஆட்சியைத் தீர்மானிக்க இடமளிக்கமுடியாது என்று முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்துள்ளார்.**

முன்னிலை சோசலிசக் கட்சியின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக நடத்தப்படும் சங்க மாநாடுகள்மூலம் நாட்டின் ஆட்சியைத் தீர்மானிக்க இடமளிக்கக்கூடாது. கொழும்பில் நடத்தப்பட்ட சங்க மாநாடு சில அரசியல் இலக்குகளைக் கொண்ட, இனவாதப் போக்குகளை முன்னிலைப்படுத்தும் நோக்கத்துடனேயே அமைந்திருந்தது.
இது ஒரு மாறுபட்ட அரசியல் நகர்வு என்பது தெளிவாகப் புரிகின்றது -என்றார். (க-இ)

# எரிவாயு சிக்கல்கள் நீடித்தால் கோத்தா நிலையே அநுரவுக்கு

## சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை

கொழும்பு, பெப்.24
நாட்டில் எரிவாயு விநியோகத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு உடன் தீர்வு காணாது விடில், கோத்தாபய ராஜபக்சவுக்கு ஏற்பட்ட கதியே, அநுர அரசாங்கத்துக்கும் ஏற்படும் என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
இந்த அரசாங்கம் எரிவாயு விநியோகத்துக்கான பொறுப்பை பிரிட்டன் நிறுவனத்துக்கு வழங்கியுள்ளது. குறைவான விலைக்கு எரிவாயு கொள்வனவுக்கு விலைமனுக்கோரல் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் எரிவாயு விநியோகத்தில் தொழில்நுட்பப் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. அரசாங்கம் இந்தப் பிரச்சினைக்கு உடன் தீர்வுகாணவேண்டும். இல்லையேல் கோத்தாவுக்கு ஏற்பட்ட கதியே இவர்களுக்கும் ஏற்படும்-என்றார். (க-இ)

# நிலக்கரி ஊழலை ஈடுகட்டவே மின்சாரக்கட்டண அதிகரிப்பு

## *மரிக்கார் எம்.பி. குற்றச்சாட்டு*

கொழும்பு, பெப்.24
நிலக்கரிக் கொள்வனவால் ஏற்பட்டுள்ள, 7 ஆயிரத்து 600 கோடி ரூபா நஷ்டத்தை ஈடுகட்டவே, மின் கட்டணத்தை அதிகரிக்க முயற்சிக்கின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் குற்றஞ்சாட்டியுள்ளார்.
இதுவரை வந்த 8 கப்பல்களில் உள்ள நிலக்கரிகளும் தரத்தில் குறைவானவை என்று இலங்கை மின்சாரசபையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் 7 ஆயிரத்து 600 கோடி ரூபா நஷ்டமாகும். இந்த நஷ்டத்தை ஈடுசெய்வதற்காகவே, இலங்கை மின்சாரசபை 13 சதவீதத்தால் மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனையை முன்மொழிந்துள்ளது. இவ்வாறான செயற்பாடுகளால் டீசல் மாபியாக்கள் மீண்டும் தலைதூக்கும். கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னரே மின்சாரப் பிரச்சினை தொடர்பில் நாம் கூறினோம். அது தற்போது ஆரம்பித்துள்ளது. அதேபோன்று ஏப்ரல் மாதத்தின் பின்னர், எரிவாயுப் பிரச்சினை ஏற்படும். ஆனால் அதற்கு காரணமானவர்களும் இந்த அரசாங்கத்தால் பாதுகாக்கப்படுவர்-என்றார். (க-இ)

# பழைமையான சட்டங்களை மறுசீரமைக்க நடவடிக்கை



*அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவிப்பு*

கொழும்பு, பெப்.24
தற்போது நடைமுறையில் உள்ள சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் ஒழுங்கு விதிகள் தற்போதைய டிஜிற்றல் யுகத்துக்குப் பொருந்தும்வகையில் மறுசீரமைக்கப்படும் என்று பொதுநிர்வாகம், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார். பழைமை யான சட்டங்கள் அனைத்தும் இரத்துச்செய்யப்படாது. அவற்றின் தனித்துவத்திற்கு சட்ட மறுசீரமைப்பில் முன்னுரிமை அளிக்கப்படும். தற்போது நடைமுறையில் உள்ள பெரும்பாலான ச[illegible]ங்கள் பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்டது. அவை பல குறை பாடுகளுடன்தான்இயற்றப்பட்டுள்ளன.பழைய சட்டங்கள் என்று அனைத்தையும் இரத்துச்செய்யமுடியாது. அவற்றின் சிறந்த உள்ளடக்கங்கள் நாட்டுக்குத் தேவையாகும். நடைமுறைக்குச் சாத்தியமானவகையில் புதிய சட்டங்கள் இயற்றப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# மதங்களின் உரிமைகளை அரசாங்கம் பாதுகாக்கும்

## பிரதி அமைச்சர் சுனில் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.24
நாட்டில் மதங்களின் உரிமைகளைப் பாதுகாக்க அரசாங்கம் முன்னிற்கும் என்று பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார். கொழும்பில் இடம்பெற்ற மஹா சங்க சம்மேளனம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
சம்மேளனங்[illegible]கள் நடத்துவதற்கு சட்டரீதியிலான பூரண அதிகாரம் அனைவருக்கும் உள்ளது. [illegible] ஆனால் தனிப்பட்ட குறுகிய நோக்கத்துக்காக நடத்துவதாக இருந்தால், அந்தச் சம்மேளனத்தின் நோக்கம் நிறைவேறப்போவதில்லை.
பௌத்த மதத்தின் பிரகாரம், மஹா சங்கத் தேரர்களுடன் செயற்படுவோம். அதேபோன்று ஏனைய மதத்தவர்களுக்கும் முறையான கௌரவத்தை வழங்கி வருகின்றோம்-என்றார். (க-இ)




## ஆரிலை பிழை?

'பழைய குருடி கதவைத் திறவடி' எண்ட கதையா திரும்பவும், காஸுக்கும் பெற்றோலுக்கும் கியூவில நிக்கவேண்டி வந்திடுமோ எண்ட பயம் சனத்திட்ட தொத்தத் தொடங்கிட்டுது. 'ஒரு கப்பல் 3,900 மெற்றிக்தொன் காஸோட வந்திருக்கு, இன்னும் ரெண்டு கப்பல் வந்துகொண்டிருக்குது' எண்டெல்லாம் லிட்ரோ காஸ் கொம்பனிக்காரர் விடுகிற அறிக்கையெல்லாம் கேக்கவும், பாக்கவும் நல்லாத் தான் இருக்குது. ஆனா, றோட்டில் கடையளுக்கு முன்னால சனம் இன்னும் காஸ் சிலிண்டரைத் தூக்கிக்கொண்டு வரிசையில குந்தியிருக்கு. 'ஒரு தட்டுப்பாடும் இல்லை, பயப்பிடாதையுங்கோ' எண்டு கம்பனி சொல்லுறதைப் பார்த்தால், சிரிப்புத்தான் வருது. கையிருப்பில காஸ் தேவையானளவு இருந்திருந்தால், எதுக்கு இப்பிடி அவசர அவசரமா கப்பல்களை கொண்டந்து காஸை இறக்கோணும்?

பெற்றோல் எண்டால் சனம் தேவைக்கு மிஞ்சி 'கான்'களில பிடிச்சுப் பதுக்கினதாலதான் செயற்கைத் தட்டுப்பாடு எண்டு ஒரு கதையை விட்டு, தங்களில பிழை இல்லை எண்டு அரசாங்கம் பேய்க்காட்டலாம். ஆனா, சமையலுக்குப் பாவிக்கிற காஸை எப்பிடிப் பதுக்க ஏலும்? ஒரு வீட்டில இருக்கிற ஒண்டு அல்லது ரெண்டு சிலிண்டரைக் குடுத்தால், அதேயளவு சிலிண்டருக்குத்தானே காஸை வாங்கமுடியும். அதால காஸை பதுக்கினதாலதான் தட்டுப்பாடு எண்டு பூச்சுத்தேலாது. நாடு முழுக்க ஒரு மாசத்துக்கு எவ்வளவு காஸ் தேவை எண்ட கணக்கு காஸ் கொம்பனிக்காரரிட்டையும், அரசாங்கத்திட்டையும் இருக்கத்தானே வேணும்? அந்தக் கணக்கின்படி கிரமமா காஸை விநியோகம் செய்திருந்தால், ஏன் தட்டுப்பாடு வரப்போகுது? சனம் எதுக்கு வெயிலில கியூவில நிண்டு காயப்போகுது? எங்கேயோ நிர்வாக மட்டத்தில இந்தக் காஸ் விசயத்தில பெரிய ஓட்டை விழுந்திருக்கு. அதை மூடிமறைக்கத்தான் இந்த 'அறிக்கை' அரசியல் நடக்குது போல.

கோத்தா காலத்திலயும் இப்பிடித்தான் கியூவில சனம் வாடி வதங்கேக்க கூட, 'எங்களில ஒருபிழையும் இல்லை. எல்லாப் பொருளும் தேவையானளவு இருக்கு' எண்டு சனத்துக்குப் 'புழுகு' மூடையை அவிட்டு விட்டவை. . கடைசியில சனம் பொறுக்க முடியாம பொங்கியெழும்ப, எல்லாம் பொறிஞ்சு கொட்டுண்டு போய் கோத்தா துண்டைக்காணம் துணியைக் காணோம் எண்டு பதவியை விட்டே ஓடித்தப்பினவர். இப்ப இருக்கிற அநுரவுக்கும் அப்பிடியொரு நிலைமை வரக்கூடாது எண்டால், நடக்கிற உண்மையைச் சனத்திடம் சொல்லுங்கோ. தட்டுப்பாடு இருந்தா இருக்கு எண்டு சொல்லுங்கோ, அதை விட்டிட்டு 'கையிருப்பு இருக்கு, கவலைப்படாதையுங்கோ' எண்டு சொல்லிச் சொல்லியே சனத்தை வரிசையில நிக்க விடுறது நியாயமில்லை.

இந்த விநியோகத்தை ஒழுங்கா கண்காணிக்காதது தான் எல்லாப் பிரச்சினைக்கும் ஆணிவேர். சனம் வரிசையில நிக்கேக்க, உள்ளுக்க ஏதோ 'உள்ளடி' வேலை நடக்குது எண்டது மட்டும் தெளிவாத் தெரியுது. அரசாங்கம் இனியாவது கொஞ்சம் இறுக்கமா இந்த முறைகேடுகளைத் தட்டிக் கேக்கோணும். இல்லாட்டி, அடுப்பு எரியாத கோபத்தில சனம் றோட்டுக்கு இறங்கினால், பிறகு திசைகாட்டியும் திசை தெரியாமத் தான் அலைய வேண்டி வரும் கண்டியளோ!

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிழக்கு மாகாணத்திலும் கிளைகளை விரித்தது VALIBEL FINANCE PLC நிறுவனம்!

நாடளாவிய ரீதியில் சிறந்த நிதிச்சேவைகள் வழங்குவதன்மூலம் வாடிக்கையாளர்களின் அசைக்கமுடியாத நம்பிக்கையை வென்ற VALIBEL FINANCE PLC நிறுவனமானது தனது சேவைகளை விஸ்தரிக்கும் பொருட்டு கிழக்கு மாகாணத்தில், திருகோணமலை, வாழைச்சேனை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் தனது கிளைகளை நிர்மாணித்துள்ளது.

இக்கிளைகளின் அங்குரார்ப்பண நிகழ்வுகளில், நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர், ஜயந்த ரங்கமுவவுடன் முகாமைத்துவக்குழு உறுப்பினர்கள், கிளை நிறுவன ஊழியர்கள், மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்கள் மற்றும் நலன் விரும்பிகள் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில், முகாமைத்துவப் பணிப்பாளர் ஜயந்த ரங்கமுவ கூறுகையில், "கிழக்கு மாகாணத்திற்குள் கிளை வலையமைப்பை விரிவுபடுத்துவதில் NAAM உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறோம். இப்பிரதேசத்தின் பாரம்பரிய மரபுகள் மற்றும் கலாசார பன்முகத்தன்மையை நாம் மிகவும் மதிக்கிறோம். பிரதேச வளர்ச்சிக்கு அர்த்தமுள்ள வகையில் பங்களிக்கும் நீண்டகாலக் கூட்டாண்மைகளை உருவாக்குவதற்கு நாம் தொடர்ந்து உறுதிபூண்டுள்ளோம். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், எமது வாடிக்கையாளர்களின் தேவைகளை மிக உயர்ந்தமட்டத்தில் பூர்த்திசெய்வதற்கு நாங்கள் முன்னுரிமை அளிக்கிறோம். வாடிக்கையாளர்மீதான இப்பொறுப்பு, எமது வாடிக்கையாளர்கள் எம்மீது வைத்திருக்கும் வலுவான மற்றும் நீடித்த நம்பிக்கையை வளர்த்துள்ளது."

VALIBEL FINANCE PLC இன் வெற்றிகரமான வளர்ச்சிப் பயணத்தில், நாடளாவிய ரீதியில் ஸ்திரத்தன்மையை மேலும் உறுதிப்படுத்தும்நோக்குடன், அதன் அனைத்து வகையான குத்தகைச்சேவைகள், நிலையான வைப்புகள், தங்கக்கடன்கள், அடகுக் கடன்கள், மற்றும் தானியங்கி வரைவுச் சேவைகள் (AUTO DRAFT) மற்றும் நுண் நிதிச்சேவைகளை நவீன டிஜிற்றல் தொழில்நுட்பக் கட்டமைப்பின்கீழ் வழங்குகிறது. VALIBEL FINANCE PLC இலங்கையின் நிதித்துறையில் ஸ்திரத்தன்மையுள்ள நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் LRA (A) கடன் தர மதிப்பீட்டைக் கொண்டுள்ளது. நிலையான வளர்ச்சி, நிலைத்தன்மை, இலாபம் மற்றும் செயற்பாட்டுத் திறனை வெளிப்படுத்தும் வலிபெல் பைனான்ஸ், "தி குளோபல் எகனாமிக்ஸ்" வழங்கும் மதிப்புமிக்க "சிறந்த நிதி நிறுவனம்" விருதையும் தொடர்ந்து பல ஆண்டுகளாகப் பெற்றுள்ளது. VALIBEL FINANCE PLCஇன் நம்பகத்தன்மை மற்றும் சேவையின் முன்னோடியாகத் திகழ்கின்றமை அதன் சேவைச் சிறப்பை மேலும் உறுதிப்படுத்துகிறது.

கொழும்பு நகரில் அமைந்துள்ள, அதிநவீன VALIBEL FINANCE PLC இன் தலைமை அலுவலகம், தனிச்சிறப்பு வாய்ந்ததாகவும் புத்தாக்கத்தின் அடையாளமாகவும் விளங்குகிறது. நிதி நிலைத்தன்மையை மேம்படுத்துவதோடு, நாடு முழுவதும் உள்ள வாடிக்கையாளர்களின் பல்வேறு நிதித்தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான VALIBEL FINANCE PLC நிறுவனத்தின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பு, இந்தமூலோபாய விரிவாக்கங்கள் மூலம் வலுப்படுத்தப்படுகிறது.

# மன்னிக்கும் இதயம் மாணிக்கக் கோவிலாகும்

'பிறர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத்தந்தையும் உங்களை மன்னிப்பார். பிறரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்கமாட்டார்.'(மத் 6:15)

மேற்படி இறைவார்த்தையைத் தினமும் திருப்பலியிலும் சரி, ஜெப வேளைகளிலும் சரி இயேசு கற்பித்த செபத்தில் எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாம் மன்னிப்பதுபோல எங்கள் குற்றங்களை மன்னியும் என்று வேண்டுதல் செய்கிறோம். இந்த அறிக்கையை உதட்டளவில் சொல்கிறோமா? அல்லது செயல்வடிவம் கொடுக்கின்றோமா? தவக்காலம் என்பது மனம்மாறி மன்னித்து உறவுகளைப் புதுப்பித்து இறைவனுக்கு ஏற்புடையவர்களாகபுதுவாழ்வுக்குள்நுழைய அழைக்கும் காலமாகும். தவறுகள் செய்வது மனித இயல்பு. எம்மை நாம் ஆராய்ந்து பார்த்து அவற்றிலிருந்து விடுபட தீயபோக்குகளை மாற்றிக் கொள்ளவேண்டும். நாம் இறைவனுக்கு எதிராகவும், அயலவருக்கு எதிராகவும், எமது ஆன்மாவுக்கு எதிராகவும் தவறுகள் பாவங்கள் செய்திருந்தால் மன்னிப்புக் கேட்கவேண்டும்.

எம்மில் பலர் நினைக்கலாம் ,மன்னிப்புக் கேட்பது கோழைத்தனம் என்று. அப்படியல்ல மன்னிப்புக் கேட்பது மனதுருக்கத்துடன் கூடிய மனச்சாட்சியின் வெளிப்பாடாகும். எமது இதயக் கனத்தை இறக்கிவைக்கும் செயலாகும். அதேபோன்று நாமும் பிறரை மன்னிக்கத் தயராக இருக்கவேண்டும். இறைவன் எம்மை மன்னிக்கும் போது நாம் மன்னிப்பு வழங்கத் தயக்கம் காட்டினால் இறைதுரோகம் செய்பவர்களாவோம். மன்னிக்கத் தெரிந்த மனிதனின் இதயம் மாணிக்க கோவிலாகும்.

● எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உற்சாகமான நாளாக அமையும். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் உங்களிடம் ஆலோசனை கேட்டு வருவார்கள். சிலருக்கு அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** மகிழ்ச்சியான நாள். புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். ஒரு சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். மாலையில் குடும்பத்துடன் உறவினர், நண்பர்கள் வீட்டுக்குச் சென்று வருவீர்கள்.

**மிதுனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும்.

**கடகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும்.காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு நவீன டிசைனில் ஆடை வாங்கும் வாய்ப்பு ஏற்படும். உங்கள் தேவையறிந்து நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** குடும்பம் அல்லது வேலை தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதை இன்றைக்குத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம்.

**துலாம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. [illegible] தாயவழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் உண்டாகும்.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்று வரும் வாய்ப்பு ஏற்படும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் மறையும்.

**மகரம்:** பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்யவும். உறவினர்கள் வருகையால் திடீர்ச்செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல் நலனில் கவனம் தேவை.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# இதயத்தால் அணுகுக...!

அரசியற்கைதிகளின் விவகாரத்தை அணுகுவதற்காக அமைக்கப்பட்டுள்ள விசேட குழுவின் பரிந்துரைக்கு அமைய, அவர்களை விடுவிக்கவும்-தண்டனைகளைக் குறைக்கவும் பரிசீலனைகள் இடம்பெறும் என்று தெரிவித்துள்ளார் நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார. அரசியற்கைதிகளை விடுவிப்பதாக பல்வேறு இடங்களில் வைத்து, பல்வேறு சந்தர்ப்பங்களில் வாக்குறுதி வழங்கியிருந்த ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம், இதுவரை அத்தகைய நடவடிக்கைகள் எதையும் எடுக்கவில்லை. சில அரசியற்கைதிகள் விடுவிக்கப்பட்ட போதிலும், நீதிமன்றங்களில் முன்னெடுக்கப்பட்ட சட்டப்போராட்டத்தின் அடிப்படையில் அமைந்த விடுவிப்பாகவே அது அமைந்திருந்ததே தவிர, அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட விடுவிப்பாக இருக்கவில்லை. இவ்வாறான நிலையில் தான், மீண்டுமொரு நம்பிக்கையைத் தமிழர்களின் மனங்களில் துளிர்க்கச் செய்திருக்கின்றார் நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார.

அரசியற்கைதிகளின் விடுதலை தொடர்பில் நீதியமைச்சர் ஹர்ஷன கருத்துத் தெரிவிப்பதும், நம்பிக்கையை விதைப்பதும் இதுவொன்றும் முதல்முறையல்ல. இந்த விடயத்தில் அவரைச் சந்தித்த தமிழ்த்தரப்புகளில், 'அரசியற்கைதிகளின் விடயம் இதயத்தால் அணுகப்படும்' என்று அவர் பலமுறை கூறியிருந்தார். எனினும் பின்னர், 'இது ஜனாதிபதியின் அதிகாரத்துக்கு உட்பட்ட விடயம்' என்று தெரிவித்து, 'கழுவுகின்ற மீனில் நழுவுகின்ற மீனாக' நகர்ந்தவரும் அவரே. எனவே, அமைச்சர் ஹர்ஷனவின் தற்போதைய கருத்துகள் எவ்வளவு தூரம் சாத்தியப்படும், அவை எவ்வளவுக்கு உண்மைத்தன்மை மிக்கவை என்ற நியாயமான சந்தேகங்கள் எழுவது தவிர்க்கமுடியாததாக அமைகின்றது.

நாட்டின் பல்வேறு சிறைச்சாலைகளில் இன்னமும் ஏராளமான தமிழ் அரசியற்கைதிகள் உள்ளனர். வழக்கு விசாரணைகள் முழுமையாக ஆரம்பிக்கப்படாமலும், கிடப்பில் போடப்பட்டும் அவர்கள் தொடர்ச்சியாகப் பழிவாங்கப்பட்டே வருகின்றனர். அவர்கள் தொடர்பான வழக்குகள் அனைத்தும் மிக விரைவாகத் திறக்கப்படவேண்டும் அல்லது அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்படவேண்டும். முறையான வகையில், உரிய நேரகாலத்தில் வழக்குகள் நடத்தப்பட்டிருந்தால் அத்தனை அரசியற்கைதிகளும் இன்று மிக அமைதியான முறையில் சமூக வாழ்க்கையொன்றை வாழ்ந்துகொண்டிருக்கச்சந்தர்ப்பம் அதிகம் உள்ளது. எனவே, இந்த விடயத்தில் இருக்கக்கூடிய இமாலயத் தவறை அநுர அரசாங்கம் உணர்ந்துகொள்வது அவசியம்.

விடுதலைப்புலிகள் மௌனித்து ஒன்றரைத் தசாப்தங்கள் தாண்டிவிட்டன. எனவே, அரசியற்கைதிகளுக்கு விடுதலைப்புலிகளுடன் இருந்த தொடர்புகள் தற்போது அற்றுப்போயிருக்கும். இந்தக் கால இடைவெளியைக் கருத்திற்கொண்டு இந்த விவகாரத்தைத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அணுகவேண்டும். தற்போதைய அரசாங்கத்தினர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைதாகி அரசியற்கைதிகளாக இருந்தவர்கள். எனவே, இந்த விடயத்தில் இருக்கக்கூடிய வலிகள், பேருண்மைகளைப் புரிந்துகொண்டு, நிஜமாகவே இதயத்தால் இந்த விவகாரத்தை அணுக அரசாங்கம் தலைப்படவேண்டும். அதுவே தமிழர்களின் எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com





## பொய்யாமொழி

**இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை**

**பொருள்:** மனைவி நற்பண்பு உடையவளானால் வாழ்க்கையில் இல்லாதது என்ன? அவள் நற்பண்பு இல்லாதவளானால் வாழ்க்கையில் இருப்பது என்ன?




# தபால் திணைக்கள வருமானம்; இந்த ஆண்டு 15,000 மில். ரூபா!

அமைச்சர் நளிந்த நம்பிக்கை

**கொழும்பு, பெப்.24**
**தபால் திணைக்களம் இந்த வருடம் 15 ஆயிரம் மில்லியன் ரூபா வருமான இலக்கை இலகுவாக அடையும் என்று சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**

கடந்த வருடம் தபால் திணைக்களத்தின் முன்னேற்றத்துக்காக, சுமார் 2 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. 13 ஆயிரத்து 450 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டது. அதனடிப்படையில் இந்த வருடம் 15 ஆயிரம் மில்லியன் ரூபா வருமான இலக்கை எட்ட முடியும். மட்டக்களப்பு, பொலநறுவை, மத்திய தபால் பரிமாற்றகம் மற்றும் தபால் தலைமையகம் ஆகியவற்றில் 24 மில்லியன் ரூபா செலவில், சூரியசக்தி உற்பத்தி அமைப்புகளை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொலநறுவை தபால் தொகுதியில் அந்தப் பணிகள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளன. 31 மில்லியன் ரூபா செலவில் தபால் அலுவலகங்களுக்கு 657 விரல் அடையாள இயந்திரங்களை கொள்வனவு செய்யவும் திட்டமிட்டுள்ளது- என்றார். (க-இ)



## இலங்கைக்கு வந்த 'கிரிஸ்டல் சிம்பரி'

கொழும்பு, பெப்.24
'எம்.வி. கிரிஸ்டல் சிம்பரி' என்ற ஆடம்பர சுற்றுலா சொகுசுப் பயணிகள் கப்பல் நேற்று 555 சுற்றுலாப் பயணிகளுடன் இலங்கையை வந்தடைந்தது. இந்தக் கப்பலில் அவுஸ்திரேலியா, இந்தியா, அமெரிக்கா போன்ற பல நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் உள்ளனர். திருகோணமலைக்கு வந்துள்ள இவர்கள் திருகோணமலை, சிகிரியா, ஹபரணை ஆகிய பிரதேசங் களில் உள்ள சுற்றுலாத்தலங்களைப் பார்வையிடத் தேவையான ஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளன. இந்தக் கப்பல் ஒரு நாள் திருகோணமலையில் தரித்து நிற்கவுள்ளது. (எ-இ)

## இலங்கை மாணவர்களுக்கு பாகிஸ்தானில் மருத்துவக்கற்கை

கொழும்பு, பெப்.24
பாகிஸ்தானின் முன்னணி மருத்துவப் பல்கலைக்கழகங்களில் மருத்துவக் கல்வியைத் தொடர்வதற்காக 25 இலங்கை மாணவர்கள் அலாமா இக்பால் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் பாகிஸ்தான் சென்றுள்ளனர்.
கராச்சியில் உள்ள ஜின்னா சர்வதேச விமான நிலையத்தைச் சென்றடைந்த மாணவர்களுக்கு அங்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் பாகிஸ்தான் மற்றும் இலங்கை உயர்கல்வி ஒத்துழைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். இந்தத் திட்டத்தைப் பாகிஸ்தானின் உயர்கல்வி ஆணைக்குழு நிர்வகிக்கின்றது. (எ-இ)

## வழமைக்குத் திரும்பியது ஆறுகளின் நீர்மட்டம்

கொழும்பு, பெப்.24
கடந்த சில தினங்களாக நிலவிய மழையுடனான வானிலை குறைவடைந்துள்ள நிலையில், நாட்டின் அனைத்து பிரதான ஆறுகளின் நீர்மட்டமும் தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளது என்று நீர்ப்பாசனத்துறையின் நீரியல் மற்றும் அனர்த்த மேலாண்மைப்பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)

# மைத்ரி விக்கிரமசிங்கவின் வாக்குமூலம் இழுபறியில்!

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மனைவி மைத்ரி விக்கிரமசிங்கவிடம் வாக்குமூலம் பெறுவதற்கான புதிய திகதி இதுவரை அறிவிக்கப்படவில்லை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். பொதுநிதி முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டது என்று கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக நிதிக்குற்றப்பிரிவு விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது. இதுதொடர்பான விசாரணைக்காக வாக்குமூலம் அளிக்க மைத்ரி விக்கிரமசிங்க கடந்த 20ஆம் திகதி நிதிக்குற்றப் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தார். ஆயினும் உடல்நிலை சரியில்லாததால் அன்று அவர் முன்னிலையாகவில்லை. இந்த நிலையில், அவரிடம் வாக்குமூலத்தைப் பதிவு செய்வதற்கான அடுத்தகட்ட நடவடிக்கை அல்லது புதிய திகதி தொடர்பாக இதுவரை எந்தத் தகவலும் பரிமாறப்படவில்லை எனப் பொலிஸ் தரப்புத் தெரிவித்துள்ளது. (எ-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தொழில்வல்லுநர்கள் எதிர்நோக்கும்

# குற்றக்குழு அச்சுறுத்தல்களை மதிப்பீடு செய்ய நடவடிக்கை

கொழும்பு, பெப்.24

**திட்டமிட்ட குற்றக்குழுக்களால் உயிர் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் சட்டத்தரணிகள், சிறைச்சாலை அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான தொழில்வல்லுநர்களின் பாதுகாப்பு நிலைமைகளை மதிப்பீடு செய்ய பொலிஸ் தலைமையகமும் பாதுகாப்பு அமைச்சும் நடவடிக்கை எடுத்துள்ளன.**

அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள இவ்வாறான நபர்கள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தலின் பேரில், அரச புலனாய்வுச் சேவையூடாக மதிப்பீட்டு அறிக்கைகள் கோரப்பட்டுள்ளன என்று பாதுகாப்புத்துறை வட்டாரங்களை மேற்கோள்காட்டி சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. திட்டமிட்ட குற்றக்குழுவுடன் தொடர்புடைய சட்டநடவடிக்கைகளில் ஈடுபடும் சில சட்டத்தரணிகளுக்கு, எதிர்த்தரப்புக் கும்பல்களால் உயிர் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. அண்மையில், அக்குரெகொட பகுதியில் சட்டத்தரணி ஒருவரும் அவரது மனைவியும் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து, சட்டத்தரணிகள் சங்கம் இதுதொடர்பாக விரிவாக ஆராய்ந்துள்ளது. அதே போன்று, திட்டமிட்ட குற்றக்குழுக் கைதிகள் சிறைச்சாலைக்குள் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவதைத் தடுத்தல் போன்ற சட்டவிரோதச் செயல்களுக்கு இடமளிக்காமையால் அதிகளவிலான சிறைச்சாலை அதிகாரிகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதனால் சிலர் தாமாகவே முன்வந்து இடமாற்றம் கோருகின்றனர். இவ்வாறு பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ள தரப்பினரின் பாதுகாப்பு நிலைமைகளை குழுவொன்றின் முன்னிலையில் சமர்ப்பித்து, உண்மையான அச்சுறுத்தல் இருப்பது உறுதிசெய்யப்பட்டால் அவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (எ-இ)



## வாகனத்தைக் கொள்ளையிட சாரதியைக் கொன்ற சிறுவன்

### புத்தளத்தில் அதிர்ச்சிச் சம்பவம்

புத்தளம், பெப்.24

புத்தளம் பகுதியில் முச்சக்கரவண்டிச் சாரதி ஒருவரைக் கடத்திக் கொலை செய்து, வாகனத்தைக் கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் 16 வயதுச் சிறுவன் ஒருவரை புத்தளம் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை புத்தளம் அடப்பனாவில்லுப் பகுதியில் உள்ள வடிகான் ஒன்றுக்குள் ஆண் ஒருவரின் சடலம் காணப்படுகின்றது என்று கிடைத்த தகவலுக்கமைய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர். உயிரிழந்தவர் கடந்த 21ஆம் திகதி தனது முச்சக்கரவண்டியில் வாடகைப் பயணம் ஒன்றுக்காகச் சென்ற அப்துல் லத்தீப் என்ற 75 வயதுடையவர் என்பது கண்டறியப்பட்டது. சம்பவத்தன்று இரவு 9.30 மணியளவில் சந்தேகநபர் உயிரிழந்தவரின் வீட்டிற்கு வந்து, அவரை வாடகைப் பயணத்துக்காக அழைத்துச் சென்றுள்ளமை பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் முச்சக்கரவண்டியைக் கொள்ளையிடும் நோக்கில், சந்தேகநபர் சாரதியின் கழுத்துப் பகுதியில் கூர்மையான ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்துவிட்டு, சடலத்தைக் கீழே தள்ளிவிட்டு முச்சக்கரவண்டியை எடுத்துச் சென்றுள்ளார். பின்னர் புத்தளம் முல்லை வீடமைப்புத் தொகுதியில் உள்ள தேவாலயத்துக்கு அருகில் சந்தேகநபர் முச்சக்கரவண்டியை கைவிட்டுச் சென்றுள்ளார். சந்தேகநபர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் என்பதும், பணம் மற்றும் முச்சக்கரவண்டியைக் கொள்ளையிடுவதற்காகவே இந்தக் கொலையைச் செய்துள்ளார் என்றும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ-இ)

## கரந்தெனிய சுத்தா உத்தரவில் சட்டத்தரணி சுட்டுக்கொலை!

*வெளிச்சத்துக்கு வரும் அக்குரெகொட சம்பவத்தின் பின்னணி*

கொழும்பு, பெப்.24

அக்குரெகொடவில் சட்டத்தரணி ஒருவரும் அவரது மனைவியும் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக, கைதுசெய்யப்பட்ட துப்பாக்கிதாரி பல முக்கியமான தகவல்களைப் பொலிஸாரிடம் வெளிப்படுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஹோமாகம குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் கடந்த சனிக்கிழமை அம்பலாங்கொடை, தெல்துவ பகுதியில் வைத்து சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டிருந்தார். அம்பலாங்கொடை, தெல்துவ பகுதியில் உள்ள தனது நண்பர் ஒருவரது வீட்டில் தங்கியிருந்து, அதற்கு அருகிலுள்ள கருவாத்தோட்டம் ஒன்றில் வேலை செய்துகொண்டிருந்தபோது அவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

46 வயதான சுனில் ரஞ்சித் எனப்படும் இவர், 2009ஆம் ஆண்டு வழங்கப்பட்ட பொதுமன்னிப்புக் காலத்தில் இராணுவத்திலிருந்து சட்டபூர்வமாக விலகியவர் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக மேல் மாகாண தெற்கு குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். ஆரம்பகட்ட விசாரணைகளின் போது, தாம் இந்தக் கொலையை செய்ததாக சந்தேகநபர் ஒப்புக்கொண்டுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது. போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான இவர், கரந்தெனிய சுத்தா என்பவருடன் நேரடித் தொடர்புகளைக் கொண்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். கரந்தெனிய சுத்தா தொலைபேசி ஊடாக வழங்கிய ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இந்தக் கொலை நடந்தது என்று சந்தேகநபர் கூறியுள்ளார். கொலை செய்ததன் பின்னர், கரந்தெனிய சுத்தா தனக்கு ஒரு இலட்சம் ரூபாய் பணத்தையும் ஹெரோய்ன் போதைப்பொருளையும் வழங்கினார் என்றும் சந்தேகநபர் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளார். இந்த இரட்டைக் கொலை தொடர்பாக பொலிஸ்மா அதிபரின் உத்தரவின் பேரில் 12 பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன. இதுவரை துப்பாக்கிதாரி உட்பட 9 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (எ-இ)

## திருட்டில் ஈடுபட்ட சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், பெப்.24

வீடொன்றில் திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து திருடப்பட்ட பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அச்சுவேலிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆவரங்கால் பகுதியில், வீட்டில் பூட்டப்பட்டிருந்த சி.சி.ரி.வி கமராவை உடைத்து, அங்கிருந்த நீர் இறைக்கும் மோட்டார் இயந்திரம் மற்றும் சில பொருள்கள் திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பில் வீட்டின் உரிமையாளரால், அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட அச்சுவேலிப் பொலிஸார், சந்தேகநபர் ஒருவரைக் கைதுசெய்துள்ளனர். (க-23)



## போதை நுகர்ந்த சட்டத்தரணி கைது

கொழும்பு, பெப்.24

போதைப்பொருள் நுகர்ந்து கொண்டிருந்த சட்டத்தரணி ஒருவர் கொழும்பு, வாழைத்தோட்டம் பொலிஸ் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சாஞ்சியாரச்சி மாவத்தை பகுதியில் உள்ள பாழடைந்த கட்டடம் ஒன்றில் வைத்து இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 'ஐஸ்' ரக போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

54 வயதான சந்தேகநபர், 1996ஆம் ஆண்டு சட்டத்தரணியாகப் பதவியேற்றுள்ளதுடன், புதுக்கடை நீதவான் நீதிமன்றம் மற்றும் மேல் நீதிமன்றத்தில் பணியாற்றிவருபவர் என்றும் கூறப்படுகின்றது.

சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (எ-இ)

## உடமையில் ஐஸ்; ஒருவர் கைது

கொழும்பு, பெப்.24

கிராண்ட்பாஸ், மாதுரகே மாவத்தை பகுதியில் 510 கிராம் 440 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் குழுவொன்றுக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், அங்கோடை பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகள் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடைச்சுவாமிகள் குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.24

ஈழத்துச்சித்தர் குடைச்சுவாமிகளின் வருடாந்தக் குருபூசை நிகழ்வு கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள குடைச்சுவாமிகளின் சமாதி ஆலயத்தில் இன்று செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது. காலை 8 மணியளவில் திருவாசக முற்றோதல் நிகழ்வு ஆரம்பமாகித் தொடர்ந்து மு.ப. 10.30 மணியளவில் சிறப்பு அபிஷேக பூஜை வழிபாடுகள் இடம்பெறும். வழிபாடுகளைத் தொடர்ந்து அன்னதானமும் இடம் பெறுமென ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (எ-41-66)

## க.மு.செல்லப்பாவின் பிறந்தநாள் நினைவுதினம்

கொடிகாமம், பெப்.24

யாழ்.பொதுநூலகத்தின் ஸ்தாபகர் கே.எம்.செல்லப்பாவின் 130ஆவது பிறந்ததின நிகழ்வு யாழ்.பொதுசன நூலகத்தில் இன்று செவ்வாய்க் கிழமை காலை 10மணிக்கு முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்.மாநகரசபை பொதுநூலகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41-159)

## யா/ விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்
## பழைய மாணவர் சங்கத்தின்
## விஷேட பொதுக்கூட்ட அறிவித்தல் - 2026

எமது கல்லூரியின் 150 ஆவது ஆண்டு விழாவின் ஏற்பாடுகள் குறித்துக் கலந்துரையாடுவதற்காகப் பழைய மாணவர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் 2026.03.01 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு எமது கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் எமது கல்லூரியின் பழைய மாணவர்கள், ஓய்வுநிலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள், இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

கௌரவ
செயலாளர்

(CR47106) J-1

## காரைநகர் பிரதேசசபை
## ஆதனப்பெயர்மாற்றம்
### வீட்டுத்திட்ட மேற்கு வீதி, தோப்புக்காடு - வட்டாரம் 04

காரைநகர் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட வட்டாரம் 04 வீட்டுத்திட்ட மேற்கு வீதி. தோப்புக் காட்டிலுள்ள 4/8 ஆதனம் சொந்தக்காரர் உரிமை கோருபவர் தட்சிணாமூர்த்தி பரராசம்மா என்ற பெயரில் காரைநகர் தெற்கு உப அலுவலக ஆதனப்பதிவேட்டில் காணப்படுகிறது.

பெயர்மாற்றத்திற்கு உட்படும் ஆதனத்தினை நாகலிங்கம் கைம்பெண் செல்லம்மா ஆகியவர் குறித்த ஆதனத்திற்கு எனது கணவர் காலஞ்சென்ற ஆறுமுகம் நாகலிங்கம் என்பவர் சொந்தக் காரராக இருந்து வந்தார். அவர் உயிரோடு இருக்கும் காலத்தில் இவ்ஆதனத்தினை நன்கொடை வழங்கியும் உறுதியும் முடித்து தந்தார். நாட்டில் ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக எனது கணவனால் எனக்கு எழுதித் தரப்பட்ட உறுதி காணாமல் போய்விட்டது. இவ்வாதனத்தை எழுதிய நொத்தாரிசின் பெயரோ. எழுதிய திகதியோ ஒன்று தேவையான படியால் இவ் ஆதனத்தை சொந்த ஆதனமாக வெளிப்படுத்தி பிரசித்த நொத்தரரிசு திரு.து.பாக்கியநாதன் முகதாவில் 5246 இலக்க 4.11.2003 ஆம் திகதியில் வெளிப்படுத்தல் சாதனம் ஒன்று நிறைவேற்றியருந்தார்.

தட்சிணாமூர்த்தி தனஞ்சயன் பெண் சிந்துகா அவர்களுக்கு பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6437 இலக்க 20.01.2016 ஆம் திகதிய உறுதி மூலம் குறித்த நாகலிங்கம் கைம்பெண் செல்லம்மா காலஞ்சென்ற பின் அவரது மகன் நாகலிங்கம் பாலச்சந்திரன் தனது மாதா வழி முதுசமும் ஆட்சியுமென அறுதியாக வழங்க அவர்கள் குறித்த ஆதனத்திற்கு சொந்தமும் உரித்தும் உடையவராகின்றார்.

**ஆதன விபரம்:**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தீவுப்பகுதி காரைதீவுக்கோவிற்பற்று காரைதீவு கிழக்கு இறை "அம்பனை" நி. ப இருபத்தைந்து 25 ஆனால் அளவின் படி இருபத்தொன்று 21 இதில் பிரித்து விடப்பட்ட பாலங்கள். நீக்கி மிகுதி நாலரை 4 1/2 இதில் நடுப்புறமாக நி.ப ஒன்றரை 1 1/2 இத ஒன்றரைக்கும் எல்லைகள்

கிழக்கு - பரமானந்தம் வேல்விழியின் ஆதனம்
வடக்கு - 12 அடி அகல ஒழுங்கை
மேற்கு - மிகுதி ஆதனம்
தெற்கு - ஜெயராம் பெண் இந்துமதியின் ஆதனம்

தட்சிணாமூர்த்தி தனஞ்சயன் பெண் சிந்துகா ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள். இவ் ஆதன்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறு அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது தட்சிணாமூரத்தி தனஞ்சயன் பெண் சிந்துகா ஆகியவர்களுக்கு ஆதனப்பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றத்தால் எடுக்கப்படும் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப் பொறுப்பிற்கும் காரைநகர் பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தவிசாளர்.
பிரதேசசபை
காரைநகர்

(CS 60833) A

## மரண அறிவித்தல்



பிறப்பு 02 . 01 . 1950
இறப்பு 22 . 02 . 2026

### தனலட்சுமி இராசரத்தினம்

இல 54, சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தனலட்சுமி இராசரத்தினம் அவர்கள் கடந்த (22.02.2026) ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை - இராசலட்சுமி தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்தையா - சரஸ்வதி தம்பதியின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற புலவர் முத்து இராசரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், ஜயபாலினி (ஆசிரியர் - யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்), பிரணவன் (UK) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுரேந்திரன் (விரிவுரையாளர் - யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி), யஸ்விகா (UK) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், லக்ஷ்மிதா, சிபோசன், ரௌத்திரன் ஆகியோரின் செல்லப் பேர்த்தியும், கைலாசபிள்ளை, ஜெயலட்சுமி, லோகநாதன், லோகேஸ்வரன், பாலசுந்தரம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2026) செவ்வாய்க் கிழமை முற்பகல் 09.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
இல. 54, சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு.
மருமகன் - 076 161 6072

(CS60834) J-1

## ஆளுநர் செயலகம் - வடமாகாணம்
## பெறுகைகளுக்கான அழைப்பு - சுத்திகரிப்புச் சேவை - 2026/2027

1. வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் பெறுகைகள் குழுத்தலைவர் அவர்கள் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் சுத்திகரிப்புச் சேவைகளுக்கான சேவையாளர்களிடமிருந்து அல்லது நிறுவனத்திடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| தொடர் இல | பெறுகை இல. | சேவையின் விபரம் | உத்தரவாத வைப்புப்பணம் ரூபா. | உத்தரவாத வைப்புப் பணம் காலம் |
|---|---|---|---|---|
| 01. | G/NP/F3/Procure/2026/02-ii | சுத்திகரிப்பு சேவை – 2026/2027 | 50,000.00 | 07.06.2026 |

2. விலைக் கேள்விதாரர்கள் சுத்திகரிப்புச் சேவைக்கான வலுவான வியாபார பதிவுச் சான்றிதழை கொண்டிருத்தல் வேண்டும்.
3. குறிப்பிட்ட உத்தரவாத வைப்பு பணத்துக்கான ஆவணம் பெறுகை ஆவணத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அன்றேல் நிராகரிக்கப்படும்.
4. தகுதிவாய்ந்த விலைக்கேள்விதாரர் மேலதிக விபரங்களையும், கேள்விப்பத்திர விண்ணப்பங்களையும், **ஆளுநர் செயலகம், வடக்கு மாகாணம், பழைய பூங்கா, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்** என்ற முகவரியில் அலுவலக நாட்களில் முற்பகல் 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 15.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
5. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இத் திணைக்களத்தில் கிடைக்கும் 'Application for Bid Documents' என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய பெறுகைக்கு மீளளிக்கமுடியாத **ரூபா 3000.00** காசாக செலுத்தி, ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 24.02.2026 தொடக்கம் 09.03.2026 வரையான காலப்பகுதியில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணிவரையான நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
6. விலைக்கேள்விகள் அனைத்தும் 10.03.2026 ஆம் திகதி முற்பகல் 10.30 க்கு முன்பதாக சேர்க்கப்படல் வேண்டும். விலைக்கேள்விகள் சேர்க்கப்பட வேண்டிய நேரம் முடிந்தவுடனேயே கேள்வி ஆவணங்கள் திறக்கப்படும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"பெறுகை ஆவணம் - சுத்திகரிப்புச் சேவை – 2026/2027, பெறுகை இல : G/NP/F3/Procure/2026/02-ii"** என தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத, விபரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படாமல் திருப்பியனுப்பப்படும்.
7. விண்ணப்பதாரர் அல்லது அவர்களின் எழுத்துமூலம் அனுமதியளிக்கப்பட்ட பிரதிநிதிகள் மட்டுமே பெறுகைகள் திறக்கப்படும் போது அனுமதிக்கப்படுவர்.
8. விலைக்கேள்வித்தாரர்களிற்கான முன் பெறுகைக் கூட்டம் (Pre Bid Meeting) ஆனது **03.03.2026** ம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு **பழைய பூங்கா, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்** என்ற முகவரியில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெறும்.
9. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**பெறுகைகள் குழுத்தலைவர்**
**ஆளுநர் செயலகம், வடக்கு மாகாணம்,**
**பழைய பூங்கா, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்**
**தொடர்புகளுக்கு : T.P: 021 222 0661/021 222 0660, Fax: 021 222 0661**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் தனலட்சுமி இராசரத்தினம்

எமது முன்னேற்றக்கழக உறுப்பினரான பிரணவன் அவர்களின் அன்புத் தாயாரும், சுரேந்திரன் அவர்களின் மாமியாரும் ஆகிய தனலட்சுமி இராசரத்தினம் அவர்கள் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அமரரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது வளர்மதி முன்னேற்றக்கழகம் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும்
சனசமூக நிலையமும்
வளர்மதி நிறைவாழ்வகம்
சம்பியன் லேன், கொக்குவில்.

தோற்றம் 02.01.1950 — மறைவு 22.02.2026

(CS/60835) J-1

# மரண அறிவித்தல்



## பொன்னம்பலம் சிறிகந்தராசா

பூநகரியைப் பிறப்பிடமாகவும், கல்வயல் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சிறிகந்தராசா அவர்கள் கடந்த (21.02.2026) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - மகாலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வநிதி அவர்களின் பாசமிகு கணவரும், கஜானா, கபிநயா ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தரூபி, காலஞ்சென்ற வசைநாயகி, ஜேம்ஸ் கிருஷ்ணமூர்த்தி (ஜேர்மனி), ஜோன் கணேசமூர்த்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2026) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பெருங்குளம் வீதி,
கல்வயல், சாவகச்சேரி.

தகவல் : குடும்பத்தினர்
074 265 7432

தோற்றம் 05.02.1957 — மறைவு 21.02.2026

# மரண அறிவித்தல்



தோற்றம் 07 03 1946 — மறைவு 22 02 2026

## கிருஷ்ணபிள்ளை பூமணி

கைதடி வடக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை பூமணி அவர்கள் கடந்த (22.02.2026) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமு - குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை அவர்களின் மனைவியும், சரஸ்வதி, நாகேஸ்வரி, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிரபாகரன் (இ.போ.ச நடத்துநர்), கீதா, பாமா (கொலன்ட்), ராஜி ஆகியோரின் பாசமிகு தாயாரும், றஞ்சினி, கேதீஸ் (டோகா), மோகன் (கொலன்ட்), ஆனந்தராஜ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், மதுஜா, மிதுன் (கொலன்ட்), தர்மிகா, நர்மதன் (லண்டன்), பிரவின், பிரதிக்ஷா, ஜெனீபன் (கைதடி குருசாமி வித்தியாலய மாணவன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், டிலக்ஷன், வினோதா, வினோத் ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும், பரணிதரன், அபிநயன், அஜிதரன் ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2026) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி வடக்கு தச்சன்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறுக் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்
கைதடி வடக்கு

(CS/60828) J-1

# மரண அறிவித்தல்



## கனகரெத்தினம் பரநிருபசிங்கம்

**(இளைப்பாறிய நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்)**

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகரெத்தினம் பரநிருபசிங்கம் அவர்கள் நேற்று (23.02.2026) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரெத்தினம் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - அன்னம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், சாரதாதேவியின் ஆருயிர் கணவரும், மகாலக்ஷ்மி (பிரான்ஸ்), காலஞ்சென்ற பொன்னம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற தெய்வேந்திரம் (கூட்டுறவுப் பரிசோதகர்), சரஸ்வதி (கனடா), திலகவதி (கொழும்பு), சிவலோகநாதன் (லண்டன்), சிவயோகவதி, சோமகலாவல்லி (பிரான்ஸ்), கேதீஸ்வரன் (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான நடராசா, நாகராசா ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சகுந்தலாதேவி, சோமசுந்தரம் மற்றும் திருவாவினன் குடியார், கமலாம்பிகை (லண்டன்), நித்தியானந்தன் (சித்தி விநாயகர் களஞ்சியம்- யாழ்ப்பாணம்), கனகசுந்தரம் (பிரான்ஸ்), வாசுகி (பிரான்ஸ்) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2026) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

1st வட்டாரம்,
புங்குடுதீவு.

தகவல் :
குடும்பத்தினர்.

தோற்றம் 13.02.1941 — மறைவு 23.02.2026

CS 31341) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைக்கடத்தல் மன்னன் எல் மென்சோ சுட்டுக்கொலை




## மெக்சிக்கோவில் பதற்றம்

நியூயோர்க், பெப்.24

**மெக்சிக்கோவால் தேடப்பட்டு வந்த மிக முக்கியமான போதைப் பொருள் கடத்தல் தலைவனும், 'ஜாலிஸ்கோ நியூ ஜெனரேஷன்' என்ற கடத்தல் கும்பலின் தலைவனுமான நெமேசியோ ஒசெகுவேரா செர் வாண்டஸ் பாதுகாப்புப் படையினரின் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார்.**

"எல் மென்சோ" என்று பரவலாக அறியப்படும் இவர் கொல்லப்பட்டதை அந்த நாட்டு பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

மெக்சிக்கோவின் ஜாலிஸ்கோ மாநிலத்திலுள்ள தபால்பா நகரில் 'எல் மென்சோ' மறைந்திருக்கின்றார் என்று கிடைத்த இரகசியத்தகவலையடுத்து இராணுவத்தினர் சுற்றி வளைப்பை மேற்கொண்டனர். அப்போது இராணுவத்தினருக்கும் போதைப் பொருள் கும்பலுக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சமர் நடந்துள்ளது. இந்த மோதலில் எல் மென்சோவின் ஆதரவாளர்கள் நால்வர் கொல்லப்பட்டனர். மூன்று இராணுவத்தினர் காயமடைந்தனர். துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த எல் மென்சோ, மேலதிக சிகிச்சைக்காக தலைநகர் மெக்சிக்கோ சிட்டிக்கு கொண்டு செல்லப்படும் வழியில் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.


இந்த விசேட தேடுதல் நடவடிக்கைக்கு அமெரிக்கா வழங்கிய புலனாய்வுத் தகவல்கள் பெரும் உதவியாக இருந்தன என்று தெரிவிக்கப்படுகிறது. எல் மென்சோவைக் கைதுசெய்ய உதவுபவர்களுக்கு அமெரிக்கா பல மில்லியன் டொலரை வெகுமதியாக அறிவித்திருந்தது. 'எல் மென்சோ' கொல்லப்பட்ட செய்தியையடுத்து 'ஜாலிஸ்கோ நியூ ஜெனரேஷன்' கும்பலின் உறுப்பினர்கள் மெக்சிக்கோவின் எட்டு மாநிலங்களில் வன்முறையில் ஈடுபட்டனர். வீதிகளில் வாகனங்களுக்குத் தீவைத்தும், வீதித் தடைகளை ஏற்படுத்தியும் பாதுகாப்புப் படையினர் மீது அவர்கள் தாக்குதல்களை நடத்தினர். இதனால் மெக்சிக்கோவின் பல பகுதிகளில் தற்போது பதற்ற மான சூழல் நிலவுகிறது. (ஏ-இ)

## மலேசியாவில் நிலநடுக்கம்

கோலாலம்பூர், பெப்.24

மலேசியாவின் சில பகுதிகளில் 7.1 மெக்னிடியூட் அளவில் நில நடுக்கம் பதிவாகியுள்ளது என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கோத்தா பெலுட் நகருக்கு வடமேற்கே 55 கிலோமீற்றர் தொலைவில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது. பூமிக்கடியில் சுமார் 620 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நடுக்கம் ஏற்பட்டுள்ளது. (ஏ-இ)



# கொட்டிய பனிப்புயலால் உறைந்தது நியூயோர்க்

நியூயோர்க், பெப்.24

அமெரிக்காவின் நியூயோர்க் நகரைத் தாக்கியுள்ள மிக மோசமான பனிப்புயல் காரணமாக, நேற்றுமுன்தினம் இரவு முதல் அந்த நகரம் முழுமையாக முடக்கப்பட்டுள்ளது. பேருந்துகள் உட்பட பொதுப்போக்குவரத்துச் சேவைகள் மற்றும் விமானப் போக்குவரத்துகள் முற்றாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. அவசர சேவைகளைத் தவிர ஏனைய அனைத்துப் பாடசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புப் படையினர், அத்தியாவசிய சேவையாளர்கள் மற்றும் அனர்த்த நிவாரணப் பிரிவினரின் வாகனங்களைத் தவிர, ஏனைய தனியார் வாகனங்கள் வீதிகளில் பயணிப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)



## நேபாளத்தில் பஸ் விபத்து; 18 பேர் உயிரிழப்பு

காத்மண்டு, பெப்.24

நேபாளத்தில் காத்மண்டுவை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பயணிகள் பேருந்து ஒன்று ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 18 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும், 27 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நடந்துள்ளது. காத்மண்டு நோக்கி 44 பயணிகளுடன் சென்ற பேருந்தே விபத்துக்குள்ளாகியுள்ளது.

கட்டுப்பாட்டை இழந்த பேருந்து ஆற்றில் கவிழ்ந்துள்ளது. பேருந்துக்குள் சிக்கியிருந்தவர்களை நீண்டநேரப் போராட்டத்தின் பின்னர் மீட்புக்குழுவினர் மீட்டுள்ளனர். (ஏ-இ)



# புடினின் நிபந்தனைகளை நிராகரித்தார் ஸெலென்ஸ்கி

கீவ், பெப்.24

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் முன்வைத்துள்ள போர்நிறுத்த நிபந்தனைகளை உக்ரேன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி திட்டவட்டமாக நிராகரித்துள்ளார். பல்லாயிரக்கணக்கான ரஷ்ய வீரர்களைப் பலி கொடுத்தும், இன்னும் ரஷ்யாவால் கைப்பற்றமுடியாத உக்ரேனின் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை விட்டுக்கொடுக்கமுடியாது என ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார். "புடின் ஏற்கனவே மூன்றாம் உலகப் போரைத் தொடங்கிவிட்டார் என்று நான் நம்புகிறேன். தீவிர இராணுவ மற்றும் பொருளாதார அழுத்தம் மட்டுமே அவரைத் தடுக்க ஒரே வழி" என அவர் வலியுறுத்தியுள்ளார். உக்ரேன் பேச்சுவார்த்தைக்கு விரைந்து வர வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அழுத்தம் கொடுத்து வருவது தொடர்பாக் கருத்துரைத்த ஸெலென்ஸ்கி, "உக்ரேன் தோல்வியடையாது. நாங்கள் நாட்டின் சுதந்திரத்துக்காகப் போராடுகிறோம்" என்று உறுதியாகத் தெரிவித்துள்ளார். (ஏ-இ)

# பாகிஸ்தான் தாக்குதலுக்கு விரைவில் தக்க பதிலடி

## ஆப்கானிஸ்தான் மிரட்டல்

காபூல், பெப்.24

ஆப்கானிஸ்தானில் நேற்றுமுன்தினம் பாகிஸ்தான் நடத்திய வான்வழித் தாக்குதலுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என்று ஆப்கானிஸ்தான் தலிபான் அரசாங்கம் தெரிவித்துள்ளது. ஆப்கானிஸ்தானின் நங்கர்ஹார், பக்திதா மாகாணங்களில் பாகிஸ்தான் நடத்திய வான்வழித் தாக்குதலில் 20 பேர் கொல்லப்பட்டனர் என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தடை செய்யப்பட்ட தெஹ்ரிக்இதலிபான் மற்றும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புகளின் 7 மறைவிடங்களை இலக்காகக் கொண்டு துல்லியமாகத் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் கொல்லப்பட்ட 20 பேரும் பயங்கரவாதிகள் என்றும் பாகிஸ்தான் அறிவித்துள்ளது. அண்மையில் பாகிஸ்தானில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் பாகிஸ்தான் தெரிவித்துள்ளது. தற்போது இந்தத் தாக்குதலுக்குத் தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என்று தலிபான் அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (ஏ-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீண்டகாலம் நிர்வாகசபையில்லாது முடங்கியுள்ள கமக்கார அமைப்புகள்

## விவசாயிகள் குற்றச்சாட்டு

**கிளிநொச்சி, பெப்.24**

**கிளிநொச்சி கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட பன்னங்கண்டி மற்றும் சின்னக்காடு கமக்கார அமைப்புகளின் ஆயுள்காலம் நிறைவடைந்தும் இதுவரை அவற்றுக்கான புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்படவில்லை. இதனால் பல்வேறு இடர்பாடுகளைச் சந்திக்கவேண்டியுள்ளது என்று விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

நிர்வாக ஆயுள்காலம் நிறைவடைந் துள்ள நிலையில், புதிய நிர்வாகத் தெரிவுகளை, கமநல சேவை நிலையம் இதுவரை நடத்தவில்லை.

ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப்பணிகளும்உரியமுறையில்முன்னெடுக்கப்படவில்லை. கடந்த காலங்களில் விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட்ட நிதி மற்றும் அபிவிருத்தி வேலைகள் தொடர்பான கணக்கறிக்கை களும் விவசாயிகளுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

எனவே உரிய கமநல சேவை நிலையம் இதற்கான நடவடிக்கைகளை எடுத்து, உடனடியாக கமக்கார அமைப்பு களைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேவேளை அண்மையில் நடந்த மாவட்ட விவசாயக்குழுக் கூட்டத்தில், ஒவ்வொரு ஆண்டும் கமக்கார அமைப்பின் புதிய நிர்வாகத் தெரிவு மேற்கொள்ளப்படும் என்று கமநல அபிவிருத்திப் பிரதி ஆணையாளரால் தெரிவிக்கப்பட்டுள்ள போதும், 3 ஆண்டுகள் கடந்தும் இந்த அமைப்புகளுக்கான நிர்வாகத் தெரிவுகள் மேற்கொள்ளப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (க-55)

# ஆசிரியர்களின் இடமாற்றம் பட்டியல் இன்று வெளியீடு!

யாழ்ப்பாணம், பெப். 24

வடக்கு மாகாணத்தில் 2026ஆம் ஆண்டுக்கான, வலயங்களுக்கு இடையிலான வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான திருத்தப்பட்ட பட்டியல்கள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் மூன்று கட்டங்களாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இணையத் தளத்தில் வெளியிடப்படவுள்ளது.

டக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வை.ஜெயச்சந்திரன் இதுதொடர்பாக நேற்று இரவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

கடந்த 2025ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் பிரசுரிக்கப்பட்ட வருடாந்த இடமாற்றத்துக்கான 'சேவையின் தேவை கருதிய' இடமாற்றப் பட்டியலில் காணப்பட்ட குறைபாடுகள் சீர் செய்யப்பட்டுப் புதிய பட்டியல் வெளியிடப்படவுள்ளது. ஆசிரியர் சங்கங்களை உள்ளடக்கிய மேன்முறையீட்டுச் சபையூடாக மேன்முறையீட்டுச் செயற்பாடுகள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் சேவையின் தேவை கருதிய திருத்தப்பட்ட புதிய பட்டியலும் (ஆசிரியர் சங்கங்களைத் தவிர்த்து) தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, சேவையின் தேவை கருதிய திருத்தப்பட்ட இடமாற்றப் பட்டியல் இன்று, நாளை மற்றும் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை என மூன்று கட்டங்களாக இணையத் தளத்தில் வெளியிடப்படவுள்ளது.

அத்துடன், சேவையின் தேவை கருதிய ஆசிரியர் இடமாற்றக் கடிதங்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 5ஆம் திகதியும், வருடாந்த இடமாற்றத்துக்கு விண்ணப்பித்துத் தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான இடமாற்றக் கடிதங்கள் மார்ச் மாதம் 15ஆம் திகதியும் வழங்கப்படும்.

இதேவேளை, 2026ஆம் ஆண்டுக்கான இடமாற்றக் கோரிக்கைகளில், இடமாற்றச் சபையினூடாக 227 விண்ணப்பங்களும், மேன்முறையீட்டுச் சபையினூடாக 90 விண்ணப்பங்களும், காத்திருப்போர் பட்டியலூடாக 51விண்ணப்பங்களுமாக மொத்தமாக 368 ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், சேவையின் தேவை கருதி வழங்கப்படும் இடமாற்றம் தொடர்பில் அதிருப்தியடையும் ஆசிரியர்கள், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் கோவையின் அத்தியாயத்துக்கமைய அந்தத் தீர்மானத்துக்கு எதிராக அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யமுடியும் - என்றுள்ளது. (ம-66)

## சொற்பொழிவு

*யாழ்., பெப்.24*

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்த புராண படனத் தொடர் சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. சிவநெறிப் பிரகாசர், சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இந்த நிகழ்வு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

# அரசாங்கக் காணிகளில் உள்ள 65,000 பேருக்கு உறுதிப்பத்திரம்



காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகள் மற்றும் ஏனைய அரச காணிகளில் குடியிருப்போருக்கு எதிர் வரும் மே மாதமளவில் 65 ஆயிரம் காணி உறுதிப்பத்திரங்களை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று காணி மற்றும் நீர்ப்பாசனப் பிரதியமைச்சர் அரவிந்த செனரத் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடந்த காலங்களில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளுக்கு காணி உறுதிப் பத்திரங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள முறைகளில் பல்வேறு முறைகேடுகளைக் காணமுடிந்தது. அரசாங்கம் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகள் மற்றும் ஏனைய அரச காணிகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் மற்றும் காணி உரிமைப் பத்திரங்களை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதற்காக கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது - என்றார். (எ-இ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 18 . 10 . 1955



மறைவு 27 . 01 . 2026

அமரர் **தர்மதேவி செல்வராஜா**

27.02.2026 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி **அமரர் தர்மதேவி செல்வராஜா** அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (**24.2.2026**) **செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள்** நாளை மறுதினம் **26.02.2026 வியாழக்கிழமை** அன்று முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற விருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சரஸ்வதி வித்தியாலயத்திற்கு அருகாமை,**
**மட்டுவில் தெற்கு சாவகச்சேரி.**

**தகவல்**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

பிறப்பு 19 . 03 . 1936



இறப்பு 23 . 02 . 2026

**மேரி யோசேப்பின் பரிமளம் இம்மானுவல் யோசேப்**

**(ஓய்வுநிலை ஆசிரியர், அருணோதயக் கல்லூரி, அளவெட்டி)**

அலுக்கை, அளவெட்டியை பிறப்பிடமாகவும், பாண்டியன் தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட மேரி யோசேப்பின் பரிமளம் (ஓய்வுநிலை ஆசிரியர், அருணோதயக் கல்லூரி, அளவெட்டி) நேற்று (23.02.2026) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப்புப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான ஆரோக்கியநாதர் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இம்மானுவல் யோசேப்பின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திரேசம்மா, யோசேப் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், லெஸ்லி, எமிலி, ஜெஸ்லி ஆகியோரின் அன்புத் தாயும், அன்ரனி, கறோலின் [illegible] றெனோ, யோசப்பின் றொசானி ஆகியோரின் அன்பு மாமியும், றொபின், கொலின், ஜெறின், டெல்வின், சலோமி ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் இன்று (24.02.2026) அஞ்சலிக்காக யாழ். பிரதான வீதியிலுள்ள வைற் கவுஸ் மலர்ச் சாலையில் வைக்கப்படும். நாளை புதன்கிழமை (25.02.2026 ) பிற்பகல் 3.30 மணிக்கு இறுதித் திருப்பலி அளவெட்டி புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு, அளவெட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**70/4 கொழும்புத்துறை வீதி,**
**பாண்டியன்தாழ்வு,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**0776401722 / 0776458562**

(CS 31342) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வெடிக்காத...

பற்றைக்குள் உரப்பைக்குள் சுற்றப்பட்ட நிலையில் மர்மப் பொருளொன்று இருப்பதை அவதானித்த சிலர், அது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். இதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், உரப்பைக்குள் இருந்தது மோட்டார்குண்டு என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். நீதிமன்ற அனுமதியைப் பெற்று அதை அகற்றும் நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-27)

## குறைந்தது...

புள்ளிவிவரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த வருடத்தின் இறுதிப்பகுதியில் 2.9 வீதமாகக் காணப்பட்ட பணவீக்கம், தற்போது 2.4 வீதமாகக் குறைந்துள்ளது என்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (அ-ம)

## சர்வதேசக்...

இணைந்து 'உலகமும் தமிழரும் தமிழும்' எனும் தலைப்பிலான சர்வதேச கருத்தரங்கத்தை ஏற்பாடு செய்துள்ளன. நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பித்த இந்தக் கருத்தரங்கின் இரண்டாம் நாளான இன்றையதினமே கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் இணையவழியில் உரையாற்றவுள்ளார்.

இலங்கையில் தமிழர்கள் தமிழை வளர்ப்பதில் எதிர்கொள்ளும் சவால்களும் அவற்றுக்கான தீர்வுகளும் எனும் தலைப்பில் அவரின் கருத்துரை அமையவுள்ளது. (அ-ம-66)

## பிக்குகளைக்...

தெரிவித்துள்ளது. பொதுபலசேனாவின் பொதுச்செயலர் ஞானசாரதேரர் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:-

செயற்பாட்டு அரசியலில் ஈடுபட்டுள்ள பௌத்த பிக்குகளை இலக்கு வைத்து அரசாங்கத்தினரும் ஏனைய தரப்பினரும் அண்மைக்காலமாக மோசமான விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். இந்த அடிப்படையற்ற விமர்சனங்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். பிக்குகள் தானத்தை மட்டும் பெற்றுக்கொண்டு அமைதியாக இருக்க வேண்டியவர்கள் அல்ல. இலங்கையும், பௌத்தமும் இரண்டறக் கலந்தவை. எனவே நாட்டுக்காகவும் நாட்டின் தேசியப் பாதுகாப்புக்காகவும் முன்னிற்பதற்கு நாம் ஒருபோதும் தயங்கமாட்டோம்.

பிக்குகளுக்கு இடையேபிரிவினையை ஏற்படுத்த அண்மைக்காலமாக சில நகர்வுகள் இடம்பெற்று வருகின்றன. அத்தகைய நடவடிக்கைகளை நாங்கள் கடுமையாகக் கண்டிக்கின்றோம். நாட்டுக்காக முன்னிலையாகும் போது, 'இனவாதிகள்' என்ற முத்திரை குத்தப்படுகின்றது. இது எமது நற்பெயர் மீதான தாக்குதலாகும். இதை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை - என்றார். (அ-ம-44)

## பிரதிவாதிகள்...

துள்ளனர். மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களின் ஒருவரின் மனைவி, இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களிடம் தெரிவித்ததாவது:-

அமரகீர்த்தி அத்துகோரள கொலை வழக்கில் எமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் ஜனாதிபதி அநுரவிடம் எழுத்துமூலம் கடிதமொன்றைக் கையளித்துள்ளோம். அத்துடன் இந்த வழக்கில் நாங்கள் மேன்முறையீடு செய்து சட்டப்போராட்டத்தை நடத்தவும் தீர்மானித்துள்ளோம்.

மூவர் அடங்கிய மேல் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பை நாங்கள் மதிக்கிறோம். எனினும், ஒரு நீதிபதி இவர்களை குற்றமற்றவர்கள் என விடுவித்தார். அந்த ஒரு விடயமே எங்களை மூச்சுவிட வைக்கிறது. அவர் எங்களுக்கு ஒரு நம்பிக்கையைத் தந்துள்ளார். இவர்களுக்காக இன்னும் ஒரு வாய்ப்பு இருக்கிறது என்பதை அது உணர்த்துகிறது. அந்த வாய்ப்பை பயன்படுத்தி, மேன்முறையீடு செய்து இந்த 12 பேரையும் விடுவிப்பதே எங்களது ஒரே எதிர்பார்ப்பாகும் - என்றார். (அ-ம)

## படிக்கட்டால்...

கும்போது அவர் தவறி வீழ்ந்தார் எனக் கூறப்படுகின்றது. இதையடுத்து அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட நிலையில், அவர் முன்னரே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## வயோதிபப்...

நடத்தப்பட்டுள்ளது. வியாபார நிலையத்தில் கொள்வனவு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த வயோதிபப் பெண்மீது, அங்கு வந்த மற்றொரு பெண் கத்திக்குத்துத் தாக்குதல் நடத்தியுள்ளார். முன்விரோதம் காரணமாகவே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த வயோதிபப் பெண் உயிராபத்தான நிலையில், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சந்தேகநபரான 50 வயதுடைய பெண் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவரிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-110)

## அச்சுவேலி...

18ஆம் திகதி சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், சிகிச்சைமுடிந்து நேற்று முன்தினம் வீடு திரும்பியுள்ளார். இதன்போது வீட்டின் பின்பக்கக் கதவு உடைக்கப்பட்டு 7 பவுண் நகைகளும், 7லட்சம்ரூபாபணமும்திருடப்பட்டமை தெரியவந்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்ட நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். தடயவியல் பொலிஸாரும் ஆய்வுப்பணிகளைமுன்னெடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-23)

## கடலட்டை....

னர் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்ட நிலையில், சந்தேகத்துக்கு இடமான வகையில் பயணித்த மூன்று படகுகள் சோதனையிடப்பட்டுள்ளன. இதன்போதே, அந்த நபர்கள் சட்டவிரோதமாகக் கடலட்டை பிடித்தமை உறுதிப்படுத்தப்பட்டுக் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து ஆயிரத்து 232 கடலட்டைகளும் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 29 முதல் 54 வயதுக்கு உட்பட்டவர்கள் எனவும், அவர்கள் அனைவரும் மன்னாரைச் சேர்ந்தவர்கள் என்றும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர்கள் அனைவரும், சான்றுப் பொருள்களுடன் கிளிநொச்சி மீன்பிடிப் பரிசோதகர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ-ம-113)

## மக்களின்...

மேலும் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு மாவட்டத்தில், கொக்குத்தொடுவாய் பகுதிக்கு உட்பட்ட கூமாவடிக்கண்டல், நாயடிச்சமுறிப்பு, கன்னாட்டி, அக்கரைவெளி உள்ளிட்ட பகுதிகளில் தமிழர்களின் காணிகளை ஆக்கிரமித்து மகாவலி அதிகாரசபையால் யானைவேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழர்கள் தற்போது பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டுவரும் வயல் நிலங்களுக்குக் குறுக்காகவே இந்த யானைவேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. இது ஆபத்தானது என்பதுடன், காணிகளை ஆக்கிரமிக்கும் நடவடிக்கையாகவும் பார்க்க வேண்டியுள்ளது. இந்தச் செயற்பாட்டை மகாவலி அதிகாரசபை உடனடியாகக் கைவிட வேண்டும். இந்த விடயம் நாடாளுமன்றத்தின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்படும் - என்றார்.

இந்த விடயத்தை, முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரனின் கவனத்துக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கொண்டு சென்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-27)

## இனப்...

இது தொடர்பில் அந்த அமைப்பு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

ஒக்ஸ்போர்ட் யூனியன் ஏற்பாடுசெய்த உரை அல்லது உரையாடல் நிகழ்வுகள் எந்தக் காரணத்துக்காகவும் ரத்துச் செய்யப்படுவதில்லை. அவ்வாறு ரத்துச் செய்வதை கருத்துச் சுதந்திரம் மீதான தாக்குதலாகவும், தன் புகழுக்கான இழுக்காகவும் அந்த நிறுவனம் கருதுகின்றது. இவ்வாறான நிலையில், நாமல் ராஜபக்சவின் ஒக்ஸ்போர்ட் உரை ரத்துச் செய்யப்பட்டமை அரிதான மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முடிவாகும். இதற்கு, நாமலின் குடும்பத்தால் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனப்படுகொலையே காரணம்.

நாமல் ராஜபக்சவின் குடும்பம் தமிழர்களுக்கு எதிராக இழைத்த போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் சொல்லொணாத் துயரங்கள் உலகறிந்தவை. அந்தப் பாதகமான செயல்களின் தொடர்ச்சியாகவே இன்றும் ராஜபக்ச குடும்பத்தினர் பார்க்கப்படுகிறார்கள். அத்தகைய ஒரு பின்னணியைக் கொண்டவருக்கு உயரிய மேடைகளை வழங்குவது அறமற்றது என்பதைத் தமிழ்மாணவ சமூகம் மிகத் தெளிவாக எடுத்துரைத்தது. இதை ஒக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் யூனியன்கள் தெளிவாக உணர்ந்துள்ளன - என்றுள்ளது. (அ-ம-66)

## கஞ்சாப்...

வடமராட்சி கிழக்கு - நாகர்கோவில் பகுதியில், கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடி விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அவரிடம் இருந்து ஒரு கிலோ 750 கிராம் கஞ்சா மீட்கப்பட்ட நிலையில், சந்தேகநபர் சான்றுப் பொருளுடன் மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்தும் நடவடிக்கைகளை மருதங்கேணிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-66)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கண்காட்சி

யாழ்ப்பாணம், பெப்.24
வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் காரைநகர்ப் பிரதேச செயலகம் நடத்திய மகளிர் அபிவிருத்தி நிலைய பிரதேசமட்டக் கண்காட்சி அண்மையில் பதில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆ.கோகுலன் தலைமையில் மகளிர் அபிவிருத்தி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக காரைநகர் பிரதேச செயலாளர் ந.ரஞ்சனா கலந்துகொண்டு கண்காட்சியை ஆரம்பித்துவைத்தார்.
நிகழ்வில் கிராம அபிவிருத்தித் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சி. நிசாந்தினி மற்றும் மகளிர் அபிவிருத்தி நிலைய தையல் போதனாசிரியர் திருமதி தர்சனா பிரசாத் ஆகியோரது சேவைக்காகப் பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவித்து விருந்தினர்களினால் கௌரவிக்கப்பட்டனர். (ச)

# திரைக்கவர்ச்சியா? இன எழுச்சியா? மோதிப் பார்ப்போம் என்கிறார் சீமான்

## நாம் தமிழர் மாநாட்டில் முழக்கம்



சென்னை, பெப். 24
திரைக்கவர்ச்சியா? அல்லது இன எழுச்சியா? எனத் தீர்மானிக்கும் வகையில், தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் அமைந்துள்ளது என்று நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார். தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, 'நாம் தமிழர்' கட்சியின் மாநாடு அண்மை யில் நடைபெற்றது. இதில் அந்தக் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கலந்துகொண்டு உரையாற்றினார். அவர் மேலும் தெரிவித்ததாவது- தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் ஐந்தாவது தடவையாகப் போட்டியிடுகின்றோம். இதுவரை எமது கொள்கையை எதற்காகவும் நாங்கள் விட்டுக் கொடுத்ததில்லை. ஓர் அரசியற்கட்சி, எந்தச் சமரசமும் இல்லாமல், பணத்துக்கு விலை போகாமல் தனித்து நிற்கின்றது என்றால், அது இந்தியத் துணைக் கண்டத்திலேயே நாம் தமிழர் கட்சி மட்டும்தான். பணத்துக்காக நாங்கள் கட்சியை ஆரம்பிக்கவில்லை. மாறாக, இனத்துக்காகவே ஆரம்பித்தோம். இதுவரை போட்டியிட்ட அனைத்துத் தேர்தல்களிலும் தோல்வியடைந்தோம். எனினும், மீண்டும் எழுந்து நிற்கின்றோம். ஏனெனில், நாம் விழுந்துவிட்டால் தமிழ்த் தேசியம் விழுந்துவிடும்- என்றார். (ம)

ஊரெழு மடத்துவாசல் சுந்தரபுரி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் 10ஆம் நாள் மாலை உற்சவமான திருமஞ்சத் திருவிழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அழகிய திருமஞ்சத்தில் விநாயகப் பெருமான் பவனி வந்தார். (எ-41-66)





இலங்கை விமானப் படையின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மட்டக்களப்பு கோட்டமுனை கனிஷ்ட கல்லூரியில் 20 இலட்சம் ரூபா செலவில் புதிய கணணிக் கூடம் அமைக்கப்பட்டு, நேற்று மாணவர்களிடம் கையளிக்கப்பட்டது. (எ-இ)



# நீர்ப்பாசனக் கால்வாயை புனரமைக்கக் கோரிக்கை

கிளிநொச்சி, பெப்.24
கிளிநொச்சி உருத்திரபுரத்தில், விவசாய வீதிக்கான பாலம் மற்றும் நீர்ப்பாசனக் கால்வாயை விரைவாகப் புனரமைக்க வேண்டும் என்று விவசாயிகள் மற்றும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்தப் பகுதியிலுள்ள நீர்ப்பாசனக் கால்வாயினூடாக, சுமார் 650 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்புக்கான நீர்ப்பாசன நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறித்த கால்வாய் சேதமடைந்துள்ளதால், நீர்ப்பாசனம் முற்று முழுதாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இதனுடன் இணைந்த விவசாய வீதியூடாக, புதுமுறிப்பு, சிவன்சோலை, உருத்திரபுரம் ஆகிய கிராமங்களுக்கான போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது. குறித்த பாலத்தினதும், நீர்ப்பாசனக் கால்வாயினதும் புனரமைப்புப்பணிகள் நீண்டகாலமாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. புனரமைப்புப்
பணிகளை விரைவாக முன்னெடுத்து போக்குவரத்தைச் சீர்செய்வதுடன், நீர்ப்பாசன விநியோகத்தையும் சீர்செய்யவேண்டும் என்று விவசாயிகளும், பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-55)

## அமெரிக்காவைப் பகைத்து

# கியூபாவுக்கு உதவ கனடா பரிசீலனை

ஒட்டாவா, பெப். 24
கியூபாவுக்கு உதவும் திட்டங்களைக் கனேடிய மத்திய அரசாங்கம் பரிசீலித்து வருகின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள் மற்றும் எரிபொருள் விநியோக முடக்கங்கள் காரணமாக, கியூபா பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. கியூபா சுகாதாரத்துறையும் செயலற்றுப் போயுள்ளதால், அங்கு மனிதாபிமான நெருக்கடிகள் அதிகரிப்பதற்கும் சாத்தியங்கள் உருவாகியுள்ளன.
இதையடுத்தே, கியூபாவுக்கு உதவிசெய்வதற்கு கனடா தயாராகிவருகின்றது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. கியூபாவுக்கு உதவி செய்வது, அமெரிக்காவை நேரடியாகப் பகைக்கும் வகையில் அமையும். இது அமெரிக்கா-கனடா இடையிலான உறவில் மேலும் விரிசலை ஏற்படுத்தும். எனவே, இந்த விடயம் தொடர்பிலும் கூட்டாட்சி அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.
இதேவேளை, அவுஸ்திரேலியா, பிரிட்டன், பிரான்ஸ் நாடுகளுடன் இணைந்தும் கியூபாவுக்கு உதவுவதற்குக் கனடா முன்வரக்கூடிய வாய்ப்புகள் உள்ளன என்றும் கூறப்படுகின்றது. (ம)

வேலையாட்கள் தேவை
தென் மாகாணத்தில் அமைந்துள்ள பலசரக்கு கடையொன்றில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய ஆண் வேலையாட்கள் தேவை.
சம்பளம் :- 50,000/-
உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:- 077 480 3379
(CS/60831) J-1

வேலையாட்கள் தேவை
திருநெல்வேலியில் உள்ள கடை ஒன்றிற்கு பெண் வேலையாட்கள் தேவை.
கணக்கு வேலைகள் தெரிந்திருத்தல் வேண்டும்.
அருகில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:- 074 239 7809



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org